**பலாகல பிரதேச சபை**
**அநுராதபுரம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பலாகல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்றிருந்த மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 133,381 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 260,853 என தவறாகப் பதியப்பட்டிருந்த காரணத்தினால் நிலையான சொத்து ரூபா 127,472 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய ஓய்வூதியப் பங்களிப்பு ரூபா 14,197 ஆக இருந்ததுடன் 02 சந்தர்ப்பத்தில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 50,000 ஆன தொகை ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததனால் செலவினம் ரூபா 35,803 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 382,059 ஆன செலுத்த வேண்டிய ஓய்வூதிய ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்ட காரணமாக ஆண்டின் செலவினம் அப்பெறுமதியினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்கு சொந்தமான 03 இடங்களிலிருந்து கிடைக்க வேண்டிய குத்தகை வருமானம் ரூபா 1,375,001 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 1,410,084 ஆக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் வருமானம் ரூபா 35,083 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம் | |
| (i) 134.1 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் இனங்காணப்பட்டு ஆதனங்களிலிருந்து |

| | | |
|---|---|---|
| | | வருடாந்த பெறுமதி அடிப்படையில்வீதவரி அறவிடுவதற்கும் அபிவிருத்தி செய்யாத காணியின் பேரில் வரி விதித்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 177 ஆம் பிரிவு | சபையின் சேவை புரியும் தற்காலிக மற்றும் அமைய ஊழியர்களுக்காக பணிக்கொடை கொடுப்பனவிற்காக உத்தேச திட்டமொன்றை தாபிப்பதற்கு உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | |
| | விதி 5.11 | சபைக்குச் சொந்தமான வழியில் காசு மற்றும் ஏனைய பெறுமதியான பொருட்கள் தொடர்பாக முறையான காப்புறுதி மேவுகையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சபை பயன்படுத்தும் கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம்,2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானமீண்டுடெழும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 8,446,979 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 3,090,399 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலிடப்பட்ட வருமானம். சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017 சனவரி 01 இல் ஆரம்ப மீதி | 2017இல் பட்டியலிடப்பட்ட வருமானம் | 2017இல் சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2017திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் |
|---|---|---|---|---|---|
| | பெறுமதி | பெறுமதி | 2017.01.01 நிலுவையில் பெறுமதி | 2017 பட்டியலிடப்பட்ட தொகையில் பெறுமதி | பெறுமதி |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| நீதிமன்ற தண்டம் | 6,937,024 | 7,996,468 | 1,309,406 | - | 13,624,086 |
| முத்திரைக் கட்டணங்கள் | 1,742,530 | 634,600 | - | - | 2,377,130 |
| வியாபார வரி | - | 1,037,230 | - | 1,037,230 | - |
| அறிவித்தல் பலகை வரி | - | 60,095 | - | 16,170 | 43,925 |
| கழிவுப்பொருள் வரி | - | 98,100 | - | 98,100 | - |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | - | 100,008 | - | 100,008 | - |
| வியாபார நிலை. கடை | - | 33,000 | - | 33,000 | - |
| கைத்தொழில் வரி கேள்வி மீது வாடகை | - | 1,410,085 | - | 1,410,085 | - |
| மோட்டர் கிரேடர் வாடகை | - | 963,500 | - | 818,550 | 144,950 |
| மொத்தம் | 8,679,554 | 12இ333இ086 | 1,309,406 | 3இ513இ143 | 16,190,091 |

**2.2.2 ஏனைய வருமானம்**

சபையின் மோட்டர் கிரேடரை வாடகைக்கு வழங்கியதால் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 144,950 ஆக இருந்தது.

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்ற தண்டப்பணம்ரூபா 13,624,086 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 2,377,130 கிடைக்க வேண்டியிருந்ததுடன் அதில் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 7,150,000 மாத்திரம் கிடைத்திருந்தமையால் மேலும் நீதிமன்றத்தண்டப்பணம் ரூபா 6,479,086 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 2,377,130 பெறவேண்டியிருந்தன.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம்,பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் வட மத்திய மாகாண சபையின் மூலம் 10 உப விதிகள் பிறப்பிக்கப்பட்டதாக 2017 நவம்பர் 30 ஆந் திகதிய 2048 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. எனினும் உரிய உப விதிக்கோவையின் ஆலேசணையின் இந்த இலக்குகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளை இனங்கண்டு அவை உள்ளடக்கப்படும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நோக்கத்திற்கு முரணான செயற்பாடுகள்**

உள்ளுராட்சி அமைச்சு செயலாளரின் 2016 யூன் 22 ஆந் திகதிய கடிதத்தின் ஆட்டிகல பழைய அலுவலகத்தில் உள்ள ஆயுர்வேத நிலையத்தை திருத்தம் செய்வதற்காக ரூபா 500,000 ஆன நலன்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்நதிஏற்பாட்டை பயன்படுத்தி சபை வளவில் அமைந்துள்ள நூலக கட்டிடத்தின் முன் பக்க பகுதிக்கு பினிசிங் ரையொன்று பொருத்தப்பட்டிருந்தது.

**(இ) எதிர்பார்க்கப்பட்ட நிறைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

ரூபா 9,413,870 மதிப்பீட்டுப் பெறுமதியான 02 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,311,230 செலவிடப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட நிறைவு மட்டத்தை பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

**(ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

சபையால் அதிகாரப் பிரதசத்தில் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தாதிருந்ததுடன் மாதாந்தம் சேரும் 15 தொன்

கழிவுப்பொருள் அதிகாரப்பிரதேசத்தின் இரண்டு இடங்களில் முறையற்ற விதத்தில் அகற்றப்பட்டிருந்தது.

**(உ) சுற்றாடல் சிக்கல்கள்**

உக்கக்கூடிய மற்றும் உக்காத கழிவுப்பொருட்கள் சுற்றாடலுக்கு விடப்படுவதால் சுற்றாடல் சிக்கல்கள் உட்பட அவை எரிக்கப்படுவதால் வளிமண்டலத்திற்கு பாரியளவு தாக்கமொன்று இடம்பெறுவது அவதானிக்கப்பட்டது.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேரான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்து இருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

2012 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சபைக்குச் சொந்தமான கை உழவு இயந்திரமொன்று பதிவுசெய்யப்படாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

### 3.3 மனித வள முகாமை

**ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்**

சபைக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 35 ஆக இருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அமைய ஊழியர்கள் உட்பட 38 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாமை

மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பெறுமதி இனங்காணப்படாத 09 சொத்து விடயங்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தயிருக்கவில்லை.

#### 3.4.2 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை

புதுஹேன்ஹின்ன 05 கடைகளுடன் கூடிய ஏக்கர் அளவிலான காணி அளவு பிரதேச வாசிகளினால் கைபறற நடவடிக்கை எடுத்தமையால் அதன் உரித்து சபைக்கு இல்லாமல் போகும் ஆபத்தொன்று காணப்பட்டது..

#### 3.4.3 கையேற்கப்படாத சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய 34.75 பரப்பளவிலான 38 மயானங்களின் உரித்தினை சபைக்கு கையேற்றிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபையினால் பராமரிக்கப்படுகின்ற அல்லது நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள 17.5ஏக்கர் அளவிலான 14 காணித் துண்டுகள் மற்றும் அளவுகள் குறிப்பிடப்படாத மற்றுமொரு காணியின் உரித்தினை 2018 மார்ச் 31 ஆந் திகதி வரை சபைக்கு கையேற்றிருக்கவில்லை.

### 3.4.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

சபையினால் செயற்படுத்தப்படுகின்ற ஆடியாகல மற்றும் சுபபோகம நெனசல நிலையத்திலுள்ள கணனி மற்றும் கணனி உபபாகங்கள் 67 விடயங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டு முதல் கணனி பாடநெறிகளை டாத்துவதற்கு தகைமையுள்ள உத்தியோகத்தர் னெசல நிலையத்திற்கு நியமிக்கப்படாமையால் அங்குள்ள சொத்துக்க் விளைவற்றுக் காணப்பட்டதுடன் சில உபகரணங்கள் 2018 மார்ச் 31 ஆந் திகதி வரை பயன்படுத்த முடியாத நிலைமைக்கு உட்பட்டிருந்தன.

### 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

2017 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் இரண்டு நூலகங்களில் ரூபா 22,170 பெறுமதியான 85 புத்தகங்கள் தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை.

### 3.6 பெறுகை செயற்பாடு

### 3.6.1 பெறுகை திட்டம்

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

முறையான எதிர்வுகூறல் ஒன்று இல்லாமல் பாதீடு தயாரிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டில் 05 வருமான விடயங்கள் மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே 43 சதவீதத்திலிருந்து 519 சதவீதம் வரையான விலகலொன்றும் 07 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையில் 34 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டன.

### 4.2 பதிலளிக்கப்படாத கணக்காய்வு விசாரணைகள்

2018 சனவரி 08 ஆந் திகதி சபைக்கு கிடைத்திருந்த கணக்காய்வு விசாரணையொன்றுக்காக 2018 யூன் 08 ஆந் திகதி வரை பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | (i) அபிவிருத்தி செய்யப்பட்ட வலயங்கள் பெயரிடப்பட்டு வீதவரி அறவிடாமை<br>(ii) நிலுவை வருமான சேகரிப்பு இடம்பெறாமை |
| (ஆ) நிலையான சொத்துக்கள் | (i) முறைப்படி மதிப்பீடு செய்யப்படாமை<br>(ii) உரித்து உறுதிப்படுத்தப்படாமை |
| (இ) உள்ளகக் கட்டுப்பாடு | (i) உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை |

| | | |
|---|---|---|
| | | (ii) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடாத்தப்படாமை |
| (ஈ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | (i) அட்டவணை தயாரிக்கப்படாமை |
| | | (ii) காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்படாமை |
| (உ) | திட்டமிடல் | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |